# பெண்கள் இணைப்புக்குழு

# ஆண்டு அறிக்கை

## *2023 -24*


நம்பர் *10,* கிழக்குத்தெரு, கொளத்தூர், சென்னை- *600 099,*

தொலைபேசி*: 044 - 25501257,*மின்அஞ்சல் *: tamilnaduwomenscollective@gmail.com,*

இணையதளம்*: www.womenscollective.net*

# தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு

## 2023-24 ஆண்டறிக்கை

1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் தேதி ஒத்த கருத்துடைய பெண்கள் தலைமையில் செயல்படும் சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து பெண்கள் சக்தியை ஒன்று திரட்டி சரித்திரம் படைக்க இணைந்து பணி செய்ய முடிவு செய்து, தனி அடையாளங்களை விடுத்து பொது அடையாளத்தில் பயணிக்க எண்ணி பெண்கள் இணைப்பு குழு என்ற பெயரில் இணைந்து செயல்படுவதற்கான கொள்கைகள் நெறிமுறைகள் வகுத்து பணியை தொடங்கியது. திருமிகு ஷீலு அவர்கள் தலைமையில், வழிநடத்துதலில் ஆறு மாவட்டங்களில் தொடங்கிய அமைப்பு இன்று தமிழகத்தில்

கன்னியாகுமரி,திருநெல்வேலி,தென்காசி,தூத்துக்குடி,மதுரை, தேனி,திண்டுக்கல், நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், சேலம், கள்ளக்குறிச்சி,

திருவண்ணாமலை,தர்மபுரி,கிருஷ்ணகிரி,ராணிப்பேட்டை,

திருப்பத்தூர்,

செங்கல்பட்டு,காஞ்சிபுரம்,திருவள்ளூர் மற்றும் சென்னை உள்பட 21 மாவட்டங்களில் 40 வட்டார அமைப்புகளாக வளர்ந்தோங்கி நிற்கிறது.

மனிதநேயத்தை சித்தாந்தமாகக்கொண்டு மக்கள் பங்கேற்பு அணுகுமுறையில் பாலியல், ஜாதி ,மத, இன, மொழி கலாச்சார அரசியல், பாகுபாடற்ற,தரமான கல்வி ,சுகாதாரம் பாதுகாப்பான சுற்றுச்சூழல் ,மற்றும் உணவு உத்தரவாதம்உறுதி செய்யப்பட்ட, அனைத்து தரப்பினருக்கும் நிலைத்த நீடித்த வளர்ச்சியுடன் கூடிய மனிதநேயம் உள்ள சமத்துவ சமதர்ம சம நீதி சமுதாயத்தை உருவாக்குவதை தொலைநோக்காக கொண்டு.

விழிப்புணர்வு ஒருங்கிணைத்தல் அணி திரட்டுதல் வழக்குரைத்தல் இவற்றை செயல்திட்டமாக வகுத்து பயிற்சி ,கருத்தரங்கு, மாநாடு, கலை நிகழ்வு, பிரச்சாரம், தோழமை மற்றும் கூட்டமைப்பு இவற்றை வழிமுறையாக கொண்டு.

## குறுகிய கால நோக்கம்

1. ஜனநாயக மதிப்பீடுகளைக் கொண்ட பெண் தலைவர்களையும் இளம் தலைமுறைகளையும் உருவாக்குதல்.
2. ஒடுக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்ட சமூகத்திலிருந்து தலைவர்களை உருவாக்குவது.

3. சுற்றுச்சூழல் சீர்கெட்ட நிலையை மாற்றுதல்.

4. பெண்கள் மீதான வன்முறைகளை தடுப்பதற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்துவது.

5. மது, போதை பொருள் இல்லாத வன்முறை இல்லாத கிராமங்களை உருவாக்குவது.

6. சமுதாயத்தின் மூத்த குடிமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு

அரசின் திட்டங்களை பெறச் செய்வது.

7. பேரிடர் மற்றும் புவி வெப்பமடைதல் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல்.

8. மரபணு மாற்றத்திற்கு எதிரான பிரச்சாரம் செய்தல்.

9. பெண் விவசாயிகளுக்கு விவசாயி என்ற அந்தஸ்து பெற செய்தல்.

10. குடும்ப அளவில் பாதுகாப்பான உணவு உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவது.

11. இயற்கை விவசாயம் சூழியல் விவசாயம் சிறுதானிய விவசாயத்தை பரவலாக்குவது.

12. பெண்கள் கூட்டு விவசாயம் ,வீட்டு தோட்டம் ,மாடி தோட்டம் செய்ய
வலியுறுத்துவது.

13. பெண்கள் நில உரிமை பெற செய்வது.

14. நிலம், உழைப்பு, கூலி மற்றும் சந்தை ஆகியவைகளில் உள்ள பாலின பாகுபாடுகளை ஒழிப்பது.

15. சிறுதானிய உற்பத்தி ,சிறுதானிய பயன்பாடு மதிப்பு கூட்டுதல் இவற்றை அதிகப்படுத்துவது.

16. வீட்டு தோட்டம் ,மாடி தோட்டம் இயற்கை முறையில் செய்ய சிறுவர்களை ஊக்குவிப்பது.

17. பாரம்பரிய விதை சேகரிப்பு பராமரிப்பு செய்து விதைகளை பகிர்ந்து
கொள்வதை ஊக்கப்படுத்துதல்.

18. பாலின சமநீதி குழுக்களை அமைத்து விழிப்புணர் பயிற்சி அளித்தல்.

19. பெண் விவசாயிகள் ,ஆண் விவசாயிகளை சங்கமாக அமைத்து விழிப்புணர்வு கல்வி அளித்தல்.

20. சிறுவர் இளைஞர் முதியோர் அமைப்புகளை உருவாக்கி பயிற்சிஅளித்தல்.

# 2023- 24 ஆம் ஆண்டின் திட்ட குறிக்கோள்

- ஒடுக்கப்பட்ட விவசாயிகளின் குடும்ப உணவு உத்தரவாதம் மற்றும் வாழ்வாதாரம் உறுதி செய்வது
- காலநிலை மாற்றத்தை தாங்கும் ஆரோக்கியமான சமூகங்களை உருவாக்கும் செயல்களை தொடங்குவது
- பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பதன் மூலம் பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதை உறுதி செய்தல்

# பணிப்பகுதி

**21 மாவட்டங்கள்**
**25 பாராளுமன்றம்**
**56 சட்டமன்றம்**
**3 மாநகராட்சி**
**61 தாலுகா**
**66 ஊராட்சி ஒன்றியம்**
**12 நகராட்சி**
**35 பேரூராட்சி**
**393 பஞ்சாயத்து**
**1135 கிராமங்கள்**

# விழிப்புணர்வு கல்வி

849 விழிப்புணர்வு பயிற்சிகள் மூலம் சிறுதானியம், சிறுதானிய சத்துக்கள் ,பாரம்பரியவிதைசேமிப்பு,காலநிலை மாற்றம், காலநிலை மாற்றத்தை தாங்கி வளரும் சிறுதானியங்கள், பாதுகாப்பான உணவு, வீட்டுத்தோட்டம், மாடித்தோட்டம், இயற்கை விவசாயம், சூழியல் விவசாயம் கூட்டு விவசாயம், உலகமயமாக்கல் ,WTO ஒப்பந்தம் போன்ற வெவ்வேறு தலைப்புகளில் 33253 பேருக்கு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது

மேலும் சமூகப் பகுப்பாய்வு, பாலியல், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறை, பெண்கள் உரிமை,குழந்தைகள்உரிமை தொழிலாளர்கள்உரிமை போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளது.

# ஒருங்கிணைப்பு சங்கங்கள்

கிராம அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட 1035 கிராமங்களில் உள்ள 1060 சங்கங்களில் 33, 819 உறுப்பினர்கள் ,15 ஆண்கள் சங்கங்கள் 1540 உறுப்பினர்களைக் கொண்டு 8,732 சிறுவர்களை உள்ளடக்கிய 540 சிறுவர் பஞ்சாயத்துக்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது .1051 வளர் இளம் பெண்களை 81 சங்கங்களாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளார்கள் ,59 இளைஞர் சங்கங்கள் 607 உறுப்பினர்களைக் கொண்டு 365 முதியோர் சங்கங்கள் 5173 முதியோர்களை கொண்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர் .

## கூட்டமைப்பு

பெண்கள்கூட்டமைப்புகள் கிராம சங்கத்திலிருந்து ஒரு பிரதிநிதி வட்டார அமைப்புக்கும் ஒவ்வொரு வட்டார அமைப்பிலிருந்தும் ஐந்து பிரதிநிதி மாவட்ட அமைப்பிற்கும் தேர்ந்தெடுத்துக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள் கிராம கூட்டம் வட்டார கூட்டம் மாதம் ஒருமுறை நடக்கும் மாவட்ட பிரதிநிதிகள் கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடக்கும்.

இந்த கூட்டங்களில் அந்த சமயங்களில் மக்களை பாதிக்கக்கூடிய பிரச்சனைகள் குறித்தும் அதை சரி செய்வதற்கான அணி திரட்டுதல் வழக்குரைத்தல் செய்வதற்கான திட்டமிடல் கண்காணித்தல் மதிப்பீடு செய்தல் இந்த கூட்டங்களில் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு 11,488 உறுப்பினர்களைக் கொண்ட வட்டார கூட்டமும் 464 உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட பிரதிநிதிகள் கூட்டமும் 467 உறுப்பினர்கள் பங்கெடுத்த மாநில பொது குழு கூட்டமும் நடைபெற்றது .

## சிறுவர் பஞ்சாயத்து






இன்று சிறுவர்களாக இருக்கக்கூடியவர்கள் நாளை இந்த நாட்டை நிர்வகிக்க கூடியவர்கள் அந்த சிறுவர்களை தலைமை பண்புள்ளவர்களாக சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டவர்களாக மற்றவர்களுக்காக குரல் கொடுப்பவர்களாக ஊழலற்ற தலைவர்களாக உருவாக்க அவர்களுடைய தகவுகளை மதிப்பீடுகளை வளர்த்தெடுக்க பெண்கள் இணைப்பு குழு உருவாக்கியது தான் இந்த குழந்தைகள் பஞ்சாயத்து. இவர்களுக்கு பல்வேறு தலைப்புகளில்

குறிப்பாக ஆளுமை திறன் வளர்ப்பு பஞ்சாயத்து கிராம சபை சமூகப் பகுப்பாய்வு பாலின பாகுபாடு பாலின சமத்துவம் பாதுகாப்பான உணவு வீட்டுத்தோட்டம் மாடித்தோட்டம் பேரிடர் மேலாண்மை குழு யோகா கவிதை கட்டுரை பேச்சு போன்ற அவர்களுடைய திறன்களை வளர்த்தெடுப்பதற்கான பல்வேறு பயிற்சிகள் கிராம அளவிலும் வட்டார அளவிலும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சிறுவர் பஞ்சாயத்து மாநில முகாம் சென்னையில் மணப்பாக்கம் இக்ஷா பயிற்சி மையத்தில் பல்வேறு ஆளுமைகளை கொண்டு மே மாதம் மூன்று நாட்கள் நடைபெற்றது அதில் அவர்களுடைய ஆளுமை திறன் வளர்வதற்கான பயிற்சிகள் கொடுத்து போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது.

## முதியோர் உரிமை சங்கம்

சமுதாய வளர்ச்சிக்கு தங்களின் உழைப்பையும் அனுபவ அறிவையும் பங்களித்த முதியோர்களையும் அரவணைக்கும் நோக்கத்துடன் அவர்கள் உரிமைகளும் பாதுகாக்கப்பட்ட முதியோர் உரிமைச் சங்கங்கள் கட்டப்பட்டு வருகிறது.

## பெண்களின் பொருளாதார மேம்பாடு

1203 பெண்கள் சேமிப்பு குழுக்கள் -18,219 உறுப்பினர்கள்.

4897 சுயதொழில் செய்யும் உறுப்பினர்கள்.

4 கூட்டுத் தொழில் -61 உறுப்பினர்கள்.

17 ஆண்கள் சேமிப்பு குழுக்கள் -273 உறுப்பினர்கள்.

63 முதியோர் சேமிப்பு குழுக்கள் -758 உறுப்பினர்கள்.

பெண்களின் பொருளாதார அந்தஸ்தை மேம்படுத்துவதற்காகவும் குடும்பங்கள் கடன் பிடியிலிருந்து வெளி வருவதற்காகவும் கடந்த 29 ஆண்டுகளாக சேமிப்பு குழுக்களை உருவாக்கி வங்கியோடு தொடர்பு ஏற்படுத்தி வங்கி கடன் பெற்று பெண்கள் கைத்தொழில் சிறு தொழில் செய்யவும் பெண்கள் பெயரில் சொத்துக்களை உருவாக்கவும் வருமானம் வரக்கூடிய தொழில்கள் செய்வதற்காகவும் இந்த சேமிப்பு குழுக்கள் உதவியது .

ஆனால் இன்றைய நிலையோ பெண்களை சேமிப்பு குழுவில் இருந்து வெளியேற்றி கடன் குழுக்களை உருவாக்கி கடன் வாங்குவது மட்டுமே என்ற நிலைக்கு பெண்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். வாங்கிய கடனை கட்டுவதற்காகவே மேலும் மேலும் கடன் வாங்கக்கூடிய சூழலில் இருக்கிறார்கள் வாங்கிய கடனை கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள் கடன்களை அடைக்க முடியாமல் ஊரைவிட்டு செல்கிறார்கள் .எந்த சொத்துக்களை கடன்

பிடியிலிருந்து மீட்டார்களோ அதே சொத்துக்களை இன்று இந்த மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்களால் விற்கப்படும் நிலை கடன் வாங்கும் பெண்களை அச்சுறுத்தும் நிலைக்கு கொண்டு வந்துள்ளது. இந்த கடனிலிருந்து ஆண்கள் விலகிக் கொள்கிறார்கள். அதனுடைய சுமை பெண்கள் தலையில் மட்டுமே சுமத்தப்படுகிறது. இன்று வங்கிகளும் கூட மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்கள் மாதிரியே செயல்பட்டு வருகிறது அரசு மைக்ரோ பைனான்ஸ் நிறுவனங்களை முற்றிலும் தடை செய்தால் ஒழிய பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைய முடியாது என்பது ஆணித் தரமான உண்மை

## அரசியல்

2023 -24 கிராம சபை கூட்டங்களில் 28,389 உறுப்பினர்கள் பங்கெடுத்துள்ளனர்

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. அரசின் நியாய விலை கடைகளில் சிறுதானியம் வழங்கக்கோரி.
2. அரசு உணவு வழங்கும் திட்டங்களான காலை சிற்றுண்டி, மதிய உணவுத் திட்டம் சிறைச்சாலைகள் மருத்துவமனைகள் மாணவர் தங்கும் விடுதிகள் மற்றும் அம்மா உணவகங்களில் சிறுதானிய உணவுகள் வழங்க கோரி.
3. பெண்கள் கூட்டுவிவசாய குழுவிற்கு பஞ்சாயத்தில் உள்ள பயன்படுத்தாத நிலங்களை நீண்ட கால குத்தகைக்கு வழங்க கோரி.
4. மரபணு மாற்றுக் கடுகை தடை செய்யக்கோரி.
5. செறிவூட்டப்பட்ட அரிசியை உடனடியாக நிறுத்தி வைத்து ஆய்வுக்கு உட்படுத்திய பிறகு வழங்க கோரி.

இந்த மனுக்களை கிராமசபை கூட்டங்கள் ,வட்ட மாவட்ட வழங்கல் அலுவலகங்களில் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் மனுக்களாக வழங்கப்பட்டுள்ளது.

2021 ல் நடந்த ஊராட்சி மற்றும் நகர சபை தேர்தலில் 76 பஞ்சாயத்து உறுப்பினர்கள் 131 வார்டு உறுப்பினர்கள் 16 ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் ஒரு மாவட்ட வார்டு உறுப்பினர் 11 பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் ஆறு நகராட்சி வார்டு உறுப்பினர்கள் நீங்கள் இணைப்பு குழு உறுப்பினர்களில் இருந்து தேர்தலில் பங்கெடுத்தனர் தொடர்ந்து இந்த உறுப்பினர்கள் பெண்கள் இணைப்பு குழுவோடு இணைந்து செயல்பட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்கள் இணைப்பு குழு 28 வது மாநில மாநாடு






பெண்கள் இணைப்பு குழு ஒவ்வொரு ஆண்டும் பெண்களை பலப்படுத்தும் வகையில் பல்வேறு தலைப்புகளில் மாநாடுகளை நடத்தி வருகிறது அந்த வகையில் 2023 ஆம் ஆண்டு பெண்களும் நிதிநிலை அறிக்கையும் எந்த தலைப்பில் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் கள்ளழகர் மஹாலில் நடத்தியது மாநாட்டின் தீர்மானங்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் மூலமாக அரசுக்கு பரிந்துரைத்தது.

மாநாட்டில் 465 பெண்கள் இணைப்பு குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மாநில மாநாடு

நத்தம், ஜூலை. 31–

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் தனியார் திருமண மண்டப வளாகத்தில் தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் மாநில மாநாடு நடந்தது. இதற்கு மாநிலத் தலைவர் சீலு தலைமை தாங்கினார். பெண்கள் இணைப்பு குழு மாநில செயற்குழு உறுப்பினர் சித்ராதேவி, குழு உறுப்பினர் திருவண்ணாமலை சுமதி ஆகியோர் முன்னிலை வகித்தார்.

பெண்கள் இணைப்புக் குழு உறுப்பினர் அனுசுயா வரவேற்றார். மாநாட்டில் 80 சதவீத விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண் விவசாயிகளுக்கு விவசாயி என்று தகுதி அளித்து அதற்கான அடையாள அட்டையை அரசு வழங்க வேண்டும், அரசு நியாய




விலை கடைகளில் அனைத்து மாவட்டங்களிலும் சிறு தானியம் வழங்க வேண்டும் என்பது உள்பட 11 கோரிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது. தொடர்ந்து மாநாட்டில் சிறு தானிய கண்காட்சிகள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. இதில் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்க மாநில செயலாளர் பொன்னுத்தாய், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட குழு உறுப்பினர் ஸ்டாலின், மக்கள் சட்ட உரிமை இயக்க மாநில தலைவர் அண்ணாத்துரை, இலக்கிய பெருமன்ற தலைவர் வெள்ளைச்சாமி, மாநில துணை செயலாளர் ஜோதி உள்ளிட்ட பலர் பெண்களும் சிறு தானியமும் என்ற தலைப்பை வலியுறுத்தி பேசினார்கள். செயற்குழு உறுப்பினர் ரெங்கநாயகி நன்றி கூறினார்.

## களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம்

80 சதவீதம் விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண் விவசாயிகளுக்கு குறிப்பாக விவசாயி விவசாய கூலிகள் ஆடு மாடு வளர்ப்போர் மீனவர் உப்பள வேலை செய்பவர்கள் மற்றும் காடுகளில் பொருள் சேகரிப்பவர்கள் விவசாயி என்ற அந்தஸ்து அங்கீகாரம் கிடைக்க [வழிவகை செய்து வருகிறது] அரசோடு வழக்குரைத்தல் செய்து வருகிறது நிலங்கள் வளங்கள் வாய்ப்பும் கட்டுப்பாடு பெண்களுக்கும் கிடைக்க பெற்றால் தான் விவசாயம் வளம் பெறும் நாடும் நலம் பெறும் அதனால் பெண் விவசாயிகள் ஒருங்கிணைக்கப்பட்டு பல்வேறு விழிப்புணர்வு கொடுக்கப்படுகிறது.

## பெண்கள் கூட்டு விவசாய குழு

நிலங்கள் அன்னியமாதல் தடுக்கவும் பெண்கள் நில உரிமைக்காகவும் குடும்ப உணவு உத்தரவாதம் உறுதி செய்யப்பட விவசாய நிலமற்ற கூலி தனித்து வாழும் பெண்கள் விதவைகள் நிலங்கள் குத்தகைக்கு எடுக்கப்பட்டு.224 கூட்டு விவசாய குழு 1356 உறுப்பினர் 183.3 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள் குறிப்பாக உணவுப் பயிருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இயற்கை விவசாயம் கலப்பு பயிர் சிறுதானிய உற்பத்திமுன்னுரிமைகொடுக்கவலியுறுத்தப்படுகிறது 3-6 மாத உணவு தேவையை உறுதி செய்யப்படுகிறது இதன் மூலம் பெண்களுக்கு நிலத்தின் மீதான பாரம்பரிய விதை மீதமான உரிமை வளர்ந்து வருகிறது முடிவெடுக்கும் திறன் வளர்கிறது நிலமும் சுற்றுச்சூழலும் உடல் நலமும் மேம்படுகிறது இந்த ஆண்டு 96 புதிய கூட்டு விவசாய குழுக்களுக்கு ரூபாய் 5000/-வீதம் 4,80,000/-ஊக்கப்படுத்தும் நிதியாக

வழங்கப்பட்டது இதில் ஆண்கள் கூட்டு விவசாய குழுக்களும் அடங்கும்.

## பாரம்பரிய விதை சேமிப்பு பரிமாற்றம்

விவசாயத்தின் முன்னோடியான பெண்கள்தான் விதை சேமிப்பு விதை நேர்த்தி விதை பராமரிப்பு பாதுகாத்து பகிர்வு அனைத்தையும் பெண்கள் இணைப்பு குழுவின் பெண் விவசாயிகள் செய்து வருகிறார்கள் பாரம்பரிய விதைகளை மீட்டெடுக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் கிராம வட்டார அளவில் பாரம்பரிய விதை திருவிழாக்கள் நடத்தப்பட்டு விதைகள் பரிமாறிக் கொள்கின்றனர்

## சிறுதானிய ஆண்டு 2023

சிறுதானிய ஆண்டு 2023 மையப்படுத்தி சிறு தானிய பொங்கல் வைக்கப்பட்டது 141 பள்ளிகளில் 20654 மாணவர்களுக்கு 18 கல்லூரிகளில் 3700 கல்லூரி மாணவர்களுக்கு சிறுதானியம் குறித்த விழிப்புணர்வு கல்வியும் சிறுதானிய பொங்கலும் சிறுதானிய உணவுப் பதார்த்தங்கள் போட்டியும் வைக்கப்பட்டது 1827 பயிற்சிகள் மூலம் 47,223 உறுப்பினர்களுக்கு சிறுதானிய விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது .

## பெண் விவசாயிகள் மாநில மாநாடு

2009 ல்தொடங்கப்பட்டகளஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் வட தமிழகம் தென் தமிழக அளவில் மாநாடு நடைபெறுகிறது பெண் விவசாயிகளுக்கான கோரிக்கைகள் வலியுறுத்துகிறது பெண்களும் நில உரிமையும் நிலங்களும் வளங்களும் பெண்களின் வாழ்வுரிமையை பாதுகாப்பான உணவு சிறுதானியங்களை மீட்டெடுப்போம் வீட்டுத்தோட்டம் மாடித்தோட்டம் பாரம்பரிய விதைகளை மீட்டெடுக்க முனைப்புடன் செயல்படுவோம் 2023-24 ஆம் ஆண்டு ஆரோக்கியமான வாழ்வுக்கு சிறுதானியமே என்ற தலைப்பில் தென்மாவட்டத்தில் மதுரையிலும்,வட மாவட்டத்தில் செங்கல்பட்டிலும் நடைபெற்றது இதில் 503 பெண்விவசாய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் .

# புதிய சிறுதானிய விவசாயிகளை ஊக்கப்படுத்தும் திட்டம்

பூமி வெப்பமாதல் பருவ கால மாற்றம் காலநிலை மாற்றம் மிகப்பெரிய அளவில் சுற்றுச்சூழலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக விவசாயம் அதிக மழையினாலும் வறட்சியாலும் அழிவுகளை சந்தித்து வருகிறது. எதிர்காலத்தில் உணவு நெருக்கடியை சந்திக்க காலநிலை மாற்றத்தை தாங்கி வளரக்கூடிய மானாவாரி பயிரான சிறுதானியங்களை பயிர் செய்ய கடந்த 2017 ஆம் ஆண்டிலிருந்து ஊக்கப்படுத்தி வருகிறது ஒரு உறுப்பினருக்கு ஒரு ஏக்கர் சிறுதானியம் கலப்பு பயிர் சாகுபடி செய்ய ரூபாய் 10,000 வீதம் உதவித்தொகை வழங்கியது அந்த வகையில் 2023-24 ஆம் ஆண்டில் 169 பெண் விவசாயிகளுக்கு 16,90,000/- ஊக்கத்தொகையாக வழங்கியது.

# சிறுதானிய மதிப்பு கூட்டல்

2023 ஆம் ஆண்டு சிறுதானிய ஆண்டாக இருப்பதாலும் பெண்களிடம் குழு கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக பாதுகாப்பான சத்தான உணவுக்காகவும் குடும்ப உணவு உற்றவாதிக்காகவும் சிறுதானிய விவசாயத்தை ஊக்கப்படுத்தி வருகிறது அந்த அடிப்படையில் சிறுதானியங்களில் மதிப்பு கூட்டல் செய்து உறுப்பினர்களின் குடும்பங்களில் நடக்கும் விழாக்களில் பெண்கள் இணைப்பு குழு கூட்டங்களில் மாநாடுகளில் பள்ளி கல்லூரியில் நாங்கள் நடத்தும் கூட்டங்களில் சிறுதானிய உணவுகள் பலகாரங்கள் செய்து கொடுத்து வருகிறோம்.

மேலும் செங்கல்பட்டு மாவட்டம் கடப்பாக்கம் வட்டாரத்தில் மல்லிகை பெண்கள் இணைப்பு குழு சுய உதவி குழு ECR ரோட்டில் சிறுதானிய உணவகத்தை ஆரம்பித்துள்ளது பல்வேறு வட்டாரங்கள் சிறுதானியங்களை விளையும் இடங்களில் இருந்து வாங்கி பயன்படுத்தி வருகிறார்கள். மற்றவர்களுக்கும் அரிசியாகவும் பலகாரமாகவும் சத்துமாவாகவும் செய்து கொடுத்து வருகிறார்கள். இதன் மூலம் மக்களின் ஆரோக்கியமும் வளர்ந்துள்ளது மருத்துவச் செலவு குறைந்துள்ளது.

சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு பெண்கள் இணைப்பு குழு உறுப்பினர்களால் 19,831 மரங்களை நட்டப்பட்டது

12010 வீட்டுத் தோட்டம் மாடித்தோட்டம்

# களஞ்சியம் அமைப்புசாரா தொழிற்சங்கம்

பெண்கள் இணைப்பு குழு ஒருங்கிணை க்கப்படாத அமைப்பு சாரா தொழிலாளர்களின் உரிமைகளுக்காக தொழிற்சங்கம் பதிவு செய்யப்பட்டு உறுப்பினர்களை வாரியத்தில் இணைத்து அவர்கள் அரசின் திட்டங்களை பெற வழிநடத்தப்படகிறார்கள்.

# பேரிடர் நிவாரணம்

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று நடந்த மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை திருவள்ளூர் காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டங்களுக்கும் டிசம்பர் 17 18 இல் தென் மாவட்டங்களில் நடந்த புயல் மழையில் அதிகமாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்திலும் அதிகமாக பாதிக்கப்பட்ட 3344 உறுப்பினர்களுக்கு 30,95,000/-நிதியில் திருவள்ளூர் மாவட்டத்திற்கு அரிசியாகவும் மற்ற மாவட்டங்களுக்கு 20 மளிகை பொருட்கள் பாய் போர்வை போன்ற நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது. இது அந்த மக்களின் உடனடி அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்தது.

# பிரச்சாரம்

## நூறு கோடி பெண்களின் எழுச்சி OBR பிரச்சாரம்











நூறு கோடி பெண்களின் எழுச்சி பிரச்சாரம் என்பது பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான மிகப்பெரிய வெகுஜன உலகளாவிய நடவடிக்கை இந்தப் பிரச்சாரத்தில் பெண்கள் இணைப்பு குழு 58 பிரச்சாரத்தில் 3292 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# பெண்கள் தினம்

அகில உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு கிராம, பஞ்சாயத்து ,வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் நடந்த 68 நிகழ்வில் 6700 பேர் பங்கெடுத்துள்ளனர்.

# அம்பேத்கர் தினம்

அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் தேதியை பெண்கள் இணைப்பு குழு தலித் உரிமை நாளாக தொடர்ந்து பிரச்சாரம் நடத்தி வருகிறோம் இந்த ஆண்டு நடந்த 43 நிகழ்வுகளில் 2472 பேர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# தொழிலாளர் தினம்

தொழிலாளர் தின பிரச்சாரத்தில் 2250 தொழிலாளர்கள் எட்டு மணி நேர வேலையை 12 மணி நேரமாக உயர்த்தியதை வாபஸ் பெற கோரி கோரிக்கையை முன்வைத்து பிரச்சாரம் நடத்தப்பட்டது. அன்றே தமிழக முதல்வர் அவர்கள் இந்த கோரிக்கையை நிறைவேற்றியது மக்களுடைய குரலுக்கு உடனே பதில் தருவதாக இருந்தது.

# பெண்கள் இணைப்பு குழு தினம்

பெண்கள் இணைப்புகள் தின பிரச்சாரத்தில் 1650 உறுப்பினர்கள் பங்கெடுத்துள்ளனர்.

# முதியோர் தினம்



அக்டோபர் 1 இல் நடந்த உலக முதியோர் தின கருத்தரங்கில் 1251 முதியோர்கள் கலந்துகொண்டு முதியோர்களுடைய கோரிக்கைகளை அனுபவங்களை முன் வைத்தனர்.

## **உலக உணவு தினம்**




அக்டோபர் 16 நடந்த உலக உணவு தின பிரச்சாரத்தில் 29 நிகழ்வுகளில் 1626 பேர் கலந்து கொண்டனர் பாரம்பரிய உணவுகள் சிறுதானிய பதார்த்தங்களில் கொண்டு வந்து படைத்தனர் சிறப்பாக செய்திருந்த பதார்த்தங்களுக்கு அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக பரிசுகள் வழங்கப்பட்டது.

## <u>பாரம்பரிய விதை திருவிழா</u>









ல் மாலை அரசுத்துறையில் வழிகாட்டலுமின்றி வட்டத்தில் TNPSC Group-4

**வாசுதேவநல்லூரில் பெண் விவசாய சங்கம் சார்பாக பாரம்பரிய விதை,உணவு திருவிழா**

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் காமராஜர் மண்டபத்தில் வைத்து களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் சார்பாக மாபெரும் பாரம்பரிய விதை மற்றும் உணவு திருவிழா கன்னியாகுமரி பெண்கள் இணைப்பு குழு லிட்வின்மேரி தலைமையில் நடைபெற்றது .இதில் 500நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் பாரம்பரிய உணவுகளை சமைத்து சாப்பிட வேண்டும் என்றும் சிறுதானிய பயிர்கள் உண்பதால் உடலுக்கு நன்மை கிடைக்கும் என்பதால் சிறுதானியங்கள் அதிக அளவில் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் வந்திருந்த நபர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. சிறுதானியம் ஒரு சத்துமிக்க அருந்தானியம் என்றும் சிறு தானியங்கள் பயிர் செய்வது என்பது ஒரு சிறந்த வேளாண்மை முறையாகவும் எனவே சிறுதானிய பயிர்களை அதிகளவில் விவசாயிகள் பயிர்செய்ய வேண்டும் என பெண் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர் .மேலும் மனிதருக்கு தேவையான சிறு தானியங்களை சாகுபடி செய்ய மிகவும் குறைந்த அளவே தண்ணீர் போதுமானது. என்பதால் கரும்பு, வாழை, நெல் போன்ற பயிர்களுக்கு தேவையான தண்ணீரில் 25 சதவீதம் தண்ணீர் சிறுதானிய பயிர்களுக்கு போதுமானது எனவே சிறுதானிய பயிர்களை விவசாயிகள் அதிக அளவு பயிரிட முன்வர வேண்டும் எனவும் களஞ்சியம் பெண் விவசாய சங்கம் சார்பாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இயற்கை காய்கறிகளை உணவாக உட்கொள்ள வேண்டும் தற்போது நடைமுறையில் உள்ள கூல்ட்ரிங்ஸ் மற்றும் செயற்கை முறையில் உள்ள உணவுகளை நிராகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பெண்கள் கழுத்தில் காய்கறிகளை மாலையாக அணிவித்து நடனமாடி விழிப்புணர்வு ஏற்படுத்தினர் .இயற்கை முறையில் பயிரிடப்பட்ட காய்கறிகள் மற்றும் செயற்கை முறையில் உள்ள உணவுப் பொருட்கள் ஆகியவற்றை பெண்கள் மாலையாக அணிவித்து நடனம் ஆடியது அனைவரையும் கவர்ந்தது.மேலும் தமிழக அரசு முன்வந்து நியாய விலை கடைகள் மற்றும் அம்மா உணவகம் மூலம் இந்த சிறுதானிய உணவுகளை வழங்கும் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் சார்பாக கோரிக்கை வைக்கப்பட்டது. விழாவில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.சதன்திருமலை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார், களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்கம் மாவட்ட பிரதிநிதி ஜெயலட்சுமி வரவேற்புரை ஆற்றினார், களஞ்சியம் பெண் விவசாயிகள் சங்க தலைவர் பொன்னுத்தாய் சிறப்புரையாற்றினார். இந்த பாரம்பரிய விதை திருவிழாவில் 500க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

27 பாரம்பரிய விதை திருவிழாக்களில் 2678 பெண் பெண் விவசாயிகள் கலந்து கொண்டு விதைகளை பகிர்ந்து கொண்டனர்.

## உலகப் பெண் குழந்தைகள் தினம்

இணைய வழியில் நடந்த உலக பெண் குழந்தைகள் தின பிரச்சாரத்தில் 170 இணைப்புகளில் 860 பேர் கலந்துகொண்டு சிறுவர்களே இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து வழி நடத்தியது சிறுவர்களுடைய ஆளுமை திறனை வளர்க்கும் வகையில் அமைந்தது.

## பெண்கள் மீதான வன்முறை எதிர்ப்பு தினம்

சமீபகாலமாக அதிகரித்து வரும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறைகளை எதிர்த்து.

பெண்கள் மீதான வன்முறை எதிர்ப்பு தினம் நவம்பர் 25 லிருந்து டிசம்பர் பத்து வரை நடந்த இரு வார பிரச்சாரத்தில்4795 பெண்கள் குழந்தைகள் ஆண்கள் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

## உலக சமூக மாமன்றம்

உலக பொருளாதார கொள்கையால் பாதிக்கப்படும் உலக மக்கள் தங்கள் குரல்களையும் குமுறல்களையும் எழுப்பும் ஒரு தளமாக செயல்படும் 2024 ல் நேபாளத்தில் நடக்கும் உலக சமூக மாமன்றத்தை நோக்கி தமிழ்நாட்டில் நடந்த தமிழ்நாடு சமூக மாமன்றமும் பாட்னாவில் நடைபெற்ற இந்திய சமூக மாமன்ற கூட்டத்திலும் கலந்து கொண்டு கிராமப்புற மக்கள் தங்கள் குரல்களை பதிவு செய்தனர் மற்ற மாநில மற்ற நாடுகளில் உள்ள மக்களை பாதிக்கும் பிரச்சினைகளை கேட்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது.

## ஹிந்து அவார்டு




ஹிந்து பத்திரிக்கை வேர்ல்டு விமன் 2024 அவார்டு தமிழ்நாட்டில் பல்வேறு தளங்களில் பணி செய்து வரும் பெண்களை அவர்கள் செய்யும் பணிகளை பாராட்டி ஊக்கப்படுத்தும் விதமாக இந்த அவார்டை வழங்கியது .

பெண்கள் இணைப்பு குழு கிராமப்புற மற்றும் விவசாய பெண்களை ஒருங்கிணைத்து செய்து வரும் பணிகளுக்காக பெண்கள் இணைப்பு குழுவிற்கு வழங்கப்பட்டது. அதை எங்களை வழி நடத்தி வரும் எங்களுடைய மாநில தலைவர் திருமிகு ஷீலு அவர்கள் பெற்றுக் கொண்டார்கள் . இந்த நிகழ்வு எங்களை உத்வேகப்படுத்தியது